"முத்துவேல் தயாரிப்புகள்"

# உலக சாதனை படைப்பவை!

சந்திர சரித்திரம்
படைத்தது இந்தியா!
சந்திரயான் 3
திட்ட இயக்குநர்
விழுப்புரத் தமிழர்
வீர முத்துவேல்
என்பது கம்பீரப் பெருமை!
**"முத்துவேல் தயாரிப்புகள்"**
**உலக சாதனைகள் படைப்பவை**
**என்பது வரலாற்று உண்மை!**

## மிசோரமில் ரயில்வே மேம்பால விபத்து!

அய்ஸ்வால், ஆக. 23 –

மிசோரம் மாநிலத்தில் கட்டப்பட்டு வந்த ரயில்வே மேம்பாலம் புதன் கிழமை இடிந்து விழுந்ததில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து ரயில்வே மற்றும் காவல் துறையினர் கூறுகையில், "இடிபாடுகளில் இருந்து இதுவரை 22 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. எஃக்கு பாலத்தின் இடிபாடுகளில் சிக்கியுள்ள நான்கு பேரின் உடல்களை மீட்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவித்துள்ளனர். மிசோரம் மாநில தலைநகர் அய்ஸ்வாலில் இருந்து 21 கி.மீ., தொலைவில் உள்ள சாய்ராங் என்னும் இடத்தில் கட்டப்பட்டுவரும் ரயில்வே மேம்பாலம், பணியின்போது புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடிந்து விழுந்தது. வடகிழக்கு மாநிலங்களின் தலைநகரங்களை இணைக்கும் ரயில்வே திட்டத்தின் படி கட்டப்பட்டு வரும் 130 மேம்பாலங்களில் ஒன்றான பைரவி சாய்ராங் இடையே கட்டப்பட்டுவரும் பாலம் இடிந்து விழுந்தது குறித்து விசாரணை நடத்த ரயில்வே நிர்வாகம் உயர்மட்டக்குழு அமைத்துள்ளது.

தருமபுரி பொம்மிடி பகுதி மலைக்கிராம மக்களின் 50 ஆண்டு கோரிக்கையை

# மனு அளித்த 5 நாட்களில் நிறைவேற்றிய அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்!

## திராவிட மாடல் ஆட்சிக்கு மலைக்கிராம மக்கள் புகழாரம்!

தருமபுரி, ஆக.24-

தர்மபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியம் பொம்மிடி அருகே உள்ள அஜ்ஜம்பட்டி, போதக்காடு, புதூர், பையர்நத்தம், பி, பள்ளிப்பட்டி போன்ற பகுதிகளில் மலைவாழ் மக்கள் பெருமளவு வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அண்டை மாவட்டமான சேலம் மாவட்டம், ஏற்காடு சேர்வராயன் மலையில் உள்ள பெரிய காடு, அனார்க்காடு, வெள்ளக்கடை மற்றும் மலைப் பகுதியில் உள்ள எஸ்டேட்டுகளுக்கு தினமும் தினக்கூலி வேலைக்கு செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். சுமார் 7 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள இந்த எஸ்டேட் பகுதிகளுக்கு வனப் பகுதியில் ரோடு இல்லாததால் வாகனத்தில் செல்ல 100 கிலோமீட்டர் தூரம் வரை செல்லும் நிலை உள்ளது. இதனால் நேர விரயம், அலைச்சலுடன் வேலை செய்து கிடைக்கும் கூலியில் ஒரு பகுதி போக்குவரத்திற்கு செலவிடும் நிலை இருக்கிறது. கடந்த 50 ஆண்டுகளாக அப்பகுதி மக்கள் மலைப்பகுதியை கடக்க சாலை இல்லாமல் 100 கிலோமீட்டர் சுற்றி வேலைக்கு சென்று வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 13 ஆம் தேதி பொம்மிடி பகுதிக்கு முத்த முன்னோடிகளை நேரில் சந்தித்து உரையாட வந்த வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் (தருமபுரி மாவட்ட பொறுப்பு அமைச்சர்) அவர்களிடம் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் பி.பழனியப்பன் ஆலோசனைப்படி பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் மலைப்பகுதி மக்களின் சார்பாக தார்ச்சாலை அமைக்க கோரி மனு அளித்தார். மனுவை பெற்று கொண்ட அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மனு மீது விரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்து சென்றார். அதன் படி மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி அவர்களிடம் தார்சாலை அமைப்பது குறித்து ஆய்வு செய்து உடனடியாக தார் சாலை அமைக்க ஆவண செய்ய உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில் கடந்த 18 ஆம் தேதி சாலை அமைக்கப்பட வேண்டிய போதகாடு பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்ட தருமபுரி மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி உடனடியாக தருமபுரி மாவட்ட எல்லை வரை தார்சாலை அமைக்க உத்தரவிட்டு,தற்போது அப்பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது.

தங்களது 50 ஆண்டு கால கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி விரைந்து செயல்படுத்தியதால் பொம்மிடி, போதகாடு பகுதி மலைக்கிராம மக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வத்துக்கும் நன்றி தெரிவித்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று நிற்கும்

# வாகனங்களை அகற்றுவது குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக.24-

நிதிநிலை அறிக்கையின் அறிவிப்பு எண்39ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று நிற்கும் வாகனங்களை அகற்றுவது குறித்த ஆலோசனைக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (23.08.2023) ரிப்பன் கட்டடக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இதில் மேயர் ஆர்.பிரியா பேசும்போது தெரிவித்ததாவது :-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பெருநகர சென்னை காவல் துறை மற்றும் பெருநகர சென்னை போக்குவரத்து காவல்துறையுடன் இணைந்து, சாலையோரங்கள், நடைபாதைகள் மற்றும் தெருக்களில் பழுதடைந்த நிலையிலும், பொது சுகாதாரத்திற்கு சீர்கேடு விளைவிக்கும் வகையிலும், பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் நீண்ட காலமாக கேட்பாரற்கு நிற்கும் வாகனங்களை மோட்டார் வாகனச் சட்டம் 380-ன் படியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 128ன்படியும் அப்புறப்படுத்தி, உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் மாநகராட்சிப் பகுதிகளில் 1038 வாகனங்கள் கைவிடப்பட்ட நிலையில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த வாகனங்களின் உரிமையாளர்கள் தாமாகவே முன்வந்து தங்களின் வாகனங்களை அப்புறப்படுத்திட ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு அப்புறப்படுத்தப்படாத கைவிடப்பட்ட வாகனங்களை செப்டம்பர் 1ஆம் தேதி முதல் காவல் துறை உதவியுடன் அப்புறப்படுத்தி வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டாரத் திற்குட்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் வைக்கப்பட்டு, உரிமைக் கோரப்படாத வாகனங்கள் ஏலம் விடப்படும்.

எனவே, மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையிலும், சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் வகையிலும் நீண்ட நாட்களாக கேட்பாரற்று நிற்கும் வாகனங்களை அதன் உரிமையாளர்கள் தாமாகவே முன்வந்து அகற்றிட அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு மேயர் திருமதி ஆர்.பிரியா தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, காவல் துறை கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து) ர.சுதாகர், காவல்துறை இணை ஆணையாளர் (கிழக்கு) திருமதி திஷா மிட்டல், வட்டார துணை ஆணையாளர்கள் உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**திமிரி நா. சீனிவாசன்**
**ஆகஸ்ட் 24 (2018)**



**தனது இளம் வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்**

**இருபது ஆண்டுகளுக்கும் மேலாக திமிரி ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தமிழ் மண்ணைக் காக்கும் எங்கள் தலைவர் முகவையின் முகம் காத்தார்.



இராமநாதபுரம் என்றால் ஞாபகம் வருவது வெயில் நிலம், தண்ணீர் இல்லா தேசம், வறட்சிக்கு பெயர் பெற்றது இப்படிபட்ட நிலப்பரப்புக்கு இன்னொரு முகம் உண்டு, அதுதான் மதச்சார்பின்மையின் பெருமுகம், வேறு எங்கும் இல்லாத மக்கள் பண்பாடு இந்த மாவட்டத்தில் உண்டு, இந்து முஸ்லீம் ஒற்றுமை உதட்டளவு இல்லாமல் உள்ளத்தளவு உள்ள நிலம் இதுவாகும்.

மாமன் மச்சான்களாக, தாய் பிள்ளை உறவுகளாக, இந்துமுஸ்லீம் மக்கள் வேற்றுமை கடந்து வாழ்ந்துவரும் ஊர் இராமநாதபுரம்,

தமிழ்நாட்டில் எங்கும் கண்டிராத வியப்புக்கள் இங்கு தான் ஏராளம், ஆண்டுதோறும் நடக்கும் ஏர்வாடி சந்தனக்கூடு திருவிழாவில் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று கூடி வழிபாடு செய்யக்கூடிய பண்பும்,பல் வேறு கிராமங்களில் வாழக்கூடிய இஸ்லாமியர்கள் இந்துக்களின் திருவிழா விற்கு சென்று மக்கள் மனங்களில் மதங்கள் வலியுறுத்தும் மனிதநேயத்தை தழைக்கச் செய்யும் பூமி இதுவாகும், ராமநாதபுரத்தை ஆட்சி செய்து வந்த சேதுபதிகள் பாண்டியர்களிடமிருந்து விடுபட்டு தன்னாட்சி புரிய விரும்பினர், அப்பொழுது எதிரிகளின் தாக்குதலை சமாளிக்கும் வகையில் அரண்மனை கோட்டை வாயில்களை பலப்படுத்த பொன் பொருள் தந்து உதவியது செய்யது தம்பி மரைக்காயர் என்ற சீதக்காதி என்கிற வள்ளல் ஆவார். வள்ளல் உதவிக்கு ஈடாக சேதுபதி அரசு வள்ளல் சீதக்காதிக்கு விஜய ரகுநாத பெரிய தம்பி என்கிற பட்டம் தந்து சகோதரத்துவத்தை வெளிப்படுத்திய தமிழ் மண் இதுவாகும். மேலும் கீழக்கரையில் ஜும்மா பள்ளிவாசல் ஒன்று உள்ளது, இப் பள்ளிவாசல் தூண்கள் அனைத்தும் திராவிட கலை பாணியில் திருக்கோயிலில் உள்ள தூண்களைப் போல வடிவமைக்கப்பட்டது இதனை பார்ப்பவர்களுக்கு இந்து கோவில் போல தோற்றமளிக்கும், இந்த கட்டிடகலையின் தன்மை நல்லிணக்கத்தின் சாட்சியாக உள்ளது.

இந்தியாவின் தென்பகுதி சமய நல்லிணக்கத்துடன் இருப்பதற்கு அடித்தளம் மிட்ட நகரம் கீழக்கரை ராமநாதபுரம் ஆகும்.

"அளவுக்கு மீறிய மதப் பற்று மூடப்பக்தி இவற்றிலிருந்து தோன்றிய மத வெறி இவை இந்த அழகிய உலகை நெடுநாளாக இருக்க பற்றி உள்ளன, வன்முறை நிரம்பியுள்ளன, நாகரிகத்தை அழித்து நம்பிக்கை இழக்கச் செய்து விட்டன, ஆற்றாமை வெளிப்படுத்தி சமய நல்லிணக்க வகுப்பினை அன்று அமெரிக்காவில் விவேகானந்தர் எடுப்பதற்கு, பேசுவதற்கு அடித்தளம் இட்டது இராமநாதபுரம் ஆகும். இராமநாதபுரம் மட்டும் வருகை தராமல் மன்னர் பாஸ்கர சேதுபதியின் நட்பு இல்லாமல் போயிருந்தால் விவேகானந்தர் இன்று போதிக்கும் சமய நல்லிணக்கம் மத வெறி யூட்டக்கூடிய வகையில் அமைந்திருக்கும் என்பது நிதர்சனம்.

சைவ கோயிலான ராமநாத சுவாமி கோயில் தொடர்பான வழக்கு ஒன்றில் அலிப் புலி ராவுத்தர் என்ற இஸ்லாமியர் ஒருவர் நீதி வழங்கும் குழுவில் இருந்துள்ளது சமய பொறைக்கு சாட்சியாகவும் இந்துக்கள் இஸ்லாமியர்கள் மத வேத ஒற்றுமை இன்றி தமிழர்களாக வாழும் ஊர் என்றும் பேசப்படுகிறது.

இந்துக்களின் புனித யாத்திரை பயணத்தில் காசி ராமேஸ்வரம் இவை இரண்டும் முக்கிய வழிபாட்டு இடங்கள் ஆகும். ஒன்று தமிழ் நாட்டில் உள்ளது மற்றொன்று உத்தரப்பிரதேசத்தில் உள்ளது, வடபகுதியில் இருந்து ராமேஸ்வரத்திற்கு புனித யாத்திரை வரக்கூடிய வடவர்கள் ராமேஸ்வரம் வந்து வழிபாடு செய்து விட்டு இந்த மண்ணையும் பார்த்து விட்டு செல்கிற பொழுது அவர்கள் உளப்பூர்வமாக உணர்வது மத நல்லிணக்கமே காவியின் நிறம் இராமநாதபுரத்தில் எடுபடாமல் இருப்பதற்கு திராவிட மண் தான் காரணம்.

இரண்டு மதங்கள் எங்களுக்கு இல்லை பிஜேபியின் மதவெறி பயணத்திட்டம் ராமநாதபுரத்தில் தொடங்கி தோல்வியில் தான் அதற்கு முக்கிய காரணம் மாண்புமிகு முதல்வர் தலைமையிலான சீர்திருத்தங்களுக்கான திராவிட மாடல் அரசுதான்.

இப்படி சேதுபதி மன்னர்கள் சீதக்காதி வள்ளல், இராமேஸ்வரம் கோவில், கீழக்கரை, ஏர்வாடி தர்ஹா, தொண்டி, வாலிநோக்கம் அழகன்குளம், பெரியபட்டிணம், என வரலாற்று சிறப்புமிக்க ஊர்கள் மக்கள் என ஒற்றுமை அடையாளங்களாக செழித்து வளரும் ஊரில் , அன்பும் மனித நேயமுள்ள மக்கள் பின்னிப்பினைந்து வாழும் ஊரில் மத அரசியல் தோல்வியை சந்திப்பதுதன் வரலாறு. கடந்த காலத்தில் பி.ஜே.பி. உணர்ந்த தேர்தல் வரலாறு இது தான்.

இராமநாதபுரத்தில் மதத்தை வைத்து அரசியல் செய்ய நினைக்கும் பா.ஜ.க வின் சதி திட்டங்களான காசி தமிழ் சங்கம் திருக்குறள் மேற்கோள்கள் திருவள்ளுவருக்கு காவிநிறம் அடித்தல் என் மண்/என் மக்கள் யாத்திரை. என அமைதி மாநிலத்தில் மத வன்முறை உருவாக்கி மக்களை பிரிக்க வேண்டும். ஆனால்

இசுலாமிய மக்கள் இந்து மக்கள், பிரிவினை தமிழகத்தில் இது எப்போதும் இருந்ததில்லை ஆனால் மோடி ஆட்சியின் பாசிச நெடி வடக்கிலிருந்து அதிமுக அடிமைகள் மூலம் மாறுவேடம் பூண்டு தெற்கில் கொஞ்சம் அடிக்க தொடங்கியது,

உடனடியாக மக்கள் மத்தியில் பாசிசத்தை புரிய வைத்து திராவிடியன் மாடல் அரசை கட்டி எழுப்பிய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கிற வரலாற்று மனிதர் வடக்கின் பாசிச நெடியை விரட்டி அடித்தார்.

இப்படி பாசிச எண்ணங்கள் மேலோங்கி விடாதபடி தமிழ் மண்ணை காத்து வரும் தலைவரின். இராமநாதபுரம் வருகை என்பது முகவை மக்களுக்கு பலத்த நம்பிக்கையளித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக மோடி இராமநாதபுரத்தில் நிற்க போகிறார், அதற்காகத்தான் ஆளுநர் வந்தார் அண்ணாமலை யாத்திரை தொடங்க இராமநாதபுரத்தை தேர்வு செய்தது அதற்காகத்தான், அமித்ஷா வந்ததும் அதற்காகத்தான் இப்படி ஊடகங்களில் பரப்பப்பட்டு மத நல்லிணக்கத்தின் சாட்சியாக உள்ள ஊரை கெடுக்க போகும், சதி திட்டம் என்னவாக இருந்துவிட்டு போகட்டும் நான் இருக்கின்றேன் என்று நம்பிக்கையளித்து இரண்டு நாட்களும் தன் சொந்த ஊரைப் போல நேசித்து மக்களுக்கு சொல்லிவிட்டு சென்றிருக்கு சேதி இதுதான், மதச்சார்பின்மை மண்ணான இராமநாதபுரம் என்பது திராவிடமண் இங்கிருந்து ஒரு பிடி மண்கூட காவி கும்பலுக்கு சென்றிடாமல் காப்போம் என்ற சூளுரை

தலைவர் வருகை தந்த இரண்டு நாளும் அதற்கு முன்பாகவும் கருப்பு சிவப்பு நிறத்திலான நம் கழகக் கொடி வரலாற்றில் நடந்த பிழைகளை திருத்தி எழுதிய கழகக்கொடி இக்கொடிதான் வீழ்ந்து கிடந்த தமிழ் சமூகத்தினை தாங்கி பிடித்த கொடி,முகவை முழுவதும் பட்டொளி வீசியது,

### முதல்வர் வருகை மகிழ்ந்த முகவை

17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் முதல்வர் இராமநாதபுரம் வருகிறார். என்கிற செய்தி அறிந்து கட்சியினர் தாண்டி இராமநாதபுரம் மாவட்ட பெண்கள் பெருத்த வரவேற்பும் அன்பும் மகிழ்ச்சியும் வெளிப்படுத்தினர்,இதற்கு முந்தைய அண்ணாமலை பாதயாத்திரையின் போது மக்கள் ஒரு பீதியுடனே இருந்தனர் வேறு ஏதாவது அசம்பாவிதம் நடந்து விடுமோ என்கிற அச்சம் இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் பரவி இருந்தது அண்ணாமலை இராமநாதபுரத்தை விட்டு வெளியேறி விட்டார் என்கிற செய்தியை அறிந்த பிறகு தான் இராமநாதபுரம் இயல்பு நிலைக்கு திரும்பியது அந்த அளவிற்கு இராமநாதபுரம் மாவட்டம் மக்கள் காவி மீது பயம் கொண்டு இருக்கும் சூழல்தான் இங்குள்ளது. இது அண்ணாமலைக்கும் அமித்ஷாவிற்கும் நன்கு தெரியும் தெரிந்தும் ஏன் இராமநாதபுரம் தேர்வு செய்யப்படுகிறது என்றால் இங்கு இருக்கக்கூடிய மதச்சார்பின்மையை எப்படியாவது கெடுத்து விட வேண்டும் என்கிற நோக்கம் மட்டுமே இந்த பா(வ)த யாத்திரை பயணத்தை மக்கள் நன்கு புரிந்து கொண்டதன் விளைவே நம்மை காக்க நம்மை பாசிச பாதுகாக்க ஒரு தலைவன் இருக்கிறான் என்கிற புது தெம்பிள் முதல்வரை இராமநாதபுரம் மாவட்டம் மக்கள் அணுகினார்கள்,அதனால் தான் இளைஞர்கள் பெண்கள் வயதில் முதியவர்கள் பள்ளி மாணவர்கள் என்கிற பல்வேறு நிலையிலும் முதல்வரை அன்பொழுக ஆரவாரித்து என் முகத்துடன் வரவேற்றனர் அப்படியே வழியழிப்பினர்.

### பண்மைத்துவம் காத்து சென்ற தலைவர்.

பேரறிஞர் அண்ணா ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று உச்சரித்து நம் மக்களின் வேற்றுமை எண்ணத்தை மாற்றினார், முத்தமிழ் அறிஞர் கலைஞர் சீர்திருத்தங்களை எல்லாம் சட்டங்கள் ஆக்கி பன்மைதுவத்தை காப்பாற்றினார், தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கொண்டு வந்த பன்மை துவம் பாசிச சக்திகளுக்கு சிம்ம சொப்பனமாக இருப்பதால் அந்தப் பன்மை துவத்தை வீழ்த்த வேண்டும் என்கிற தீய நோக்கத்தோடு பாரதிய ஜனதா கட்சி தமிழகத்தை அணுகி வருகிறது. இந்தியா முழுவதும் பன்மை துவம் இருந்தாலும் தமிழகத்தில் தலை துவங்கி செழித்து வளரும் நிலைக்கு திராவிட இயக்கம் மட்டுமே காரணம் இந்த பன்மை துவம் கடைக்கோடியான இராமநாதபுரத்தில் நேரடி காட்சியாகவே காணலாம் இங்கு மத வேற்றுமைக்கு வழியில்லை மத அடிப்படை வாதத்திற்கும் வழியில்லை, இந்து முஸ்லிம் இணைந்து வாழக்கூடிய பல நகரங்களில் இராமநாதபுரம் பிரதானமான ஒன்று இது ஒன்றுதான் பாரதிய ஜனதா கட்சியை கண்ணை உறுத்துகிறது. இந்து முஸ்லிம், இந்து முஸ்லிம், இந்து முஸ்லிம் என்று மட்டுமே அரசியல் செய்யக்கூடிய பாரதிய ஜனதாவிற்கு இராமநாதபுரத்தில் மீது ஒரு கண் இருக்கத்தான் செய்யும். ஆனால் அவர்களின் இந்த பார்வை மூடத்தனமானது ஆகும். அவர்கள் மாவட்டத்தினுடைய பன்மைதுவத்தை சிதைக்க வேண்டும் என்கிற நோக்கத்தை உருவாக்குகிறார்கள். என்பதை உணர்ந்தால் தான் தலைவர் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது மக்களின் எண்ணங்கள் மாறக்கூடாது என்கிற அடிப்படையில் 17 ஆகஸ்ட் அன்று நடந்த பாக முகவர்கள் மாநாட்டில் பாக முகவர்கள் 10 பாராளுமன்ற தொகுதியிலிருந்து வருகை தந்து சிறப்பித்து கொண்டிருந்த வேளையில்,கட்சித் தொண்டர்கள் தலைவரின் உரை கேட்க தயாராக இருந்த பொழுது, கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்கிற நோக்கத்தில் கட்டி எழுப்பப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகளாக இருக்கின்ற போது அவர்களுக்கு பன்மை துவத்தை விளக்க வேண்டியதில்லை என்கிற அடிப்படையில் பாசிச மோடிக்கு பன்மைத்துவத்தை பறைசாற்றும் வகையிலான அறை கூவலை தலைவர் விடுத்தார்.

தொடர்ந்து பொய் சொல்லுவதில் கோயம்பல்ஸை மிஞ்சக்கூடிய வகையில் அரசியலமைப்பு சட்ட உறுதி மொழியை எடுத்து பிரதமர் நாற்காலியில் அமர்ந்த ஒருவர் நாட்டு மக்களை ஏமாற்று வகையில் பொய் சொல்லுவதை லட்சியமாகக் கொண்டு பிரிவினையை வலியுறுத்தும் பாசிச சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு கொண்டு வருவது மட்டுமே மக்களுக்கும் இந்த நாட்டிற்கும் நன்மை பயக்கும் என்கிற அடிப்படையில் தலைவர் ஆற்றிய உரையில் உடன்பிறப்புகள் மெய்சிலிர்த்தனர்.

திராவிட இயக்கத்தின் சீர்திருத்த கருத்துக்கள் இந்தியா முழுவதும் பரவ வேண்டும் திராவிட இயக்கங்களின் சட்டங்கள் இந்தியாவில் முழுமையாக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் எதிர்க்கட்சியாக இருந்த பொழுது 39 பாராளுமன்றங்களில் வெற்றி பெற்று முன்மாதிரியாக இருந்ததைப் போல தற்பொழுது புதுச்சேரி உள்ளிட்ட 40 பாராளுமன்றங்களிலும் நமது திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான அணி வெற்றி பெற வேண்டும் என்கிற சூழலைக்கு கழக உடன்பிறப்புகள் மட்டுமல்ல பொதுமக்களும் கரங்கோர்த்து தலைவரின் இந்தியா கூட்டணிக்கு தயாரான நிலையை இராமநாதபுரத்தில் காண முடிந்தது.

தென்பகுதியில் ஒதுக்கப்பட்ட நிலமாக கிடந்த முகவையை நோக்கி கழகத்தின் தொண்டர்களை குவித்து தோள்கொடுத்த தோழனான முதல்வர்

சாலை மார்க்கமாக நீண்ட பயணம் மேற்கொண்டு ஓய்வில்லாமல் உழைக்கும் தலைவருக்கு கழகத் தொண்டர்களும் பொதுமக்களும் கொடுத்த அனைத்து வரவேற்பையும் ஏற்றுக்கொண்டு முகவையில் இரண்டு நாட்களும் தோளோடு தோல் கொடுக்கும் தோழனாக, துயரங்களும் துன்பங்களும் மக்களை நெருங்கினாலும் நான் இருக்கிறேன் என்கிற கருணை பார்வையை மக்களுக்கும் தொண்டர்களுக்கும் தன்னை நாடி வந்த அத்தனை பேருக்கும் அள்ளி அளித்தார் தலைவர்.

### முதல்வர் உரையளித்த நம்பிக்கை

தமிழ்நாட்டில் பா.ஜ.கவின் பாதம் தாங்கி அடிமையாக இருப்பவர் தான் பழனிசாமி. அ.தி.மு.க., பா.ஜ.கவின் அடிமை வாரிசு ஆகும். பொய் சொல்லித்தான் அ.தி.மு.கவினருக்கு அரசியல் செய்யத் தெரியும். அவர்களுக்கென்று கொள்கையோ, தியாகமோ கிடையாது. அதனால்தான் தி.மு.க எதிர்ப்பை மட்டுமே நம்பி அரசியல் செய்து, இன்று மக்களால் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர். இந்தியாவைக் காப்பாற்றப்போவது `இந்தியா' கூட்டணிதான். இந்தியா கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய தேர்தல் முழக்கமாகவே இருக்க வேண்டும்

என்னுடைய தலைவர் பேசியது சாமானியர்கள் பாசிச மோடி அரசு வீழ்த்தப்பட வேண்டும் என்கிற எண்ணம் உடைய பல கோடி மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் இருந்தது. பாசிச பாரதிய ஜனதா கட்சி யின் அரசின் ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களின் கணவர் 2024 இல் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்தியாவை யாரும் காப்பாற்ற முடியாது என்று பேசியது. வெறும் வார்த்தைகள் அல்ல இந்திய ஒன்றியத்தின் நிதியமைச்சர் இன் கணவர் இவ்வாறு பேசியது சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது, இந்த ஆட்சி மாற வேண்டும் என்கிற மக்களின் எண்ணங்களின் பிரதிபலிப்பே ஆகும் என்றதுடன், அடிமை எடப்பாடி அவர்கள் நிர்மலா சீதாராமன் கணவர் எழுதிய நூலை வாங்கி படிக்க வலியுறுத்தினார்.

மேற்கண்ட அமைச்சரின் கணவரின் வாசகத்தை மேற்கோள் காட்டி தலைவர் 17,000 பாக முகவர்களிடம் நம்பிக்கையோடு இருங்கள் நான் வீழ்த்தப் போவது பாசிச ஆட்சி விளையப்போவது இந்தியா முழுமைக்கான இந்தியா கூட்டணியினுடைய ஆட்சி என்று முதல்வர் அளித்த நம்பிக்கை இராமநாதபுரத்தில் அழுத்தம் திருத்தமாக வெளிப்பட்டது.

சாலைமார்க்கம் வழிநெடுக கைகூப்பி நின்ற முகவை மக்கள் மோடியிடம் இருந்து முகவை மண்ணை காப்பாற்றுங்கள் என்று கூறியது போல இருந்தது.



வழக்கறிஞர் **இரா.இராஜிவ்காந்தி**
கழக மாணவர் அணித்தலைவர்

ஏனெனில் இராமநாதபுரம் நகரில் சின்ன கடை என்கிற ஒரு வர்த்தகப் பகுதி உள்ளது. இங்கு இஸ்லாமிய சகோதரர்கள் அடர்த்தியாக வசித்து வருகிறார்கள் இதன் அருகிலே அவர்களின் ரத்த உறவாகவும் உற்ற உறவாகவும் இருக்கக்கூடிய இந்து சகோதரர்கள் வசித்து வருகிறார்கள் இந்து சகோதரர்களின் முளைப்பாரி உற்சவர் திருவிழா ஊர்வலம் ஒவ்வொரு வருடமும் நடைபெறும். வழிபாட்டு முறைகள் வேறு வேறு என்றாலும்.இந்த ஊர்வலம் சின்னக்கடை வழியாக வரும் பொழுது இசுலாமிய சகோதரர்கள் வரவேற்று அகம் மகிழ்ந்து வழியனுப்பி வைப்பார்கள், சேதுபதி மன்னர்கள் தங்கள் காலத்தில் பள்ளிவாசல்கள் அளித்த நிலங்கள் உளப்பூர்வமாகவே ஒற்றுமைக்கு வழி வகுத்து என்றும் உள்ளது, இந்த நல்லிண தொடர்ச்சி தலைவர் வருகை மூலம் காப்பாற்றப்பட்டுள்ளது.

### மீனவர் மக்களுக்கு அறிவிப்பும் கடலோடிகளுக்கு மகிழ்ச்சியும்

பதினெட்டாம் தேதி இராமநாதபுரம் பாம்பனில் மீனவர் எழுச்சி மாநாடு நடைபெற்றது. முதல்முறையாக மீனவர்களுக்காக அரசு சார்பில் நடைபெறும் எழுச்சி மாநாடு இது என்கிற அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையில் நடைபெறும் அரசு மீனவர்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் மீன்பிடித் தொழில் செய்யக்கூடிய மீனவர்கள் நலன் பாதுகாக்கும் வகையில் மீனவர்களுக்கு வீட்டுமனை பட்டா, கூட்டுறவு கடன், மீன்பிடி தடைக்கால நிவாரணம் உயர்வு உட்பட ரூ.926.88 கோடி மதிப்பீட்டிலான 10 முக்கியஅறிவிப்புகளை வெளியிட்டு மீனவர்களை மகிழ்ச்சிப்படுத்தினார். இதன்மூலம் 2.77 லட்சம் மீனவர்கள் பயனடைவார்கள். மேலும் 14 ஆயிரம் பேருக்கு ரூ.88.90 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளையும் முதல்வர் வழங்கினார் தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து மீனவர்களுக்கும் சென்று சேரும் வகையில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார். மேலும் கச்சத்தீவு என்பது மீனவர்களுடைய நலன் மற்றும் தமிழகத்தினுடைய உரிமை என்ற அளவில் கச்சத்தீவை மீட்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியங்களில் ஒன்று என்கிற அடிப்படையில் தலைவர் உரையாற்றினார்.

கட்சத்தீவு கட்டுகதைக்கு முற்றுப்புள்ளிவைத்து கழகம் கட்சத்தீவினை மீட்டெடுக்க ஒன்றிய அரசினை வலியுறுத்தி சூளுரைத்தார்.

அடிமை அதிமுக இன்று எடப்பாடி தலைமையில் சிக்கி சின்னாபின்னமாகி வருகிறது. எடப்பாடி தன்னுடைய பொய் பித்தலாட்டங்களுக்கு அதிமுக கட்சி இரையாகி வருகிறது. இந்த நிலையில் கச்சத்தீவு மீட்பு பிரச்சனை குறித்த விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக பேசி வரும் பொய் கட்டுக்கதைகளை முறியடிக்கும் வகையில் கச்சத்தீவு குறித்த உண்மை நிலவரத்தை எடுத்துரைத்து அச்சத்தீவை மீட்போம் என்கிற அறைக்குவலையும் விடுத்து சென்றிருக்கிறார்.

உப்பு புளி மிளகாயை ஊருக்கு கொடுத்த வெயில் நிலத்தில் திருக்குவளை மைந்தர்

பொதுவாக தலைவர் அவர்கள் திருக்குவளைக்கு செல்லும்போது மக்கள் எப்படி மண்ணின் மைந்தர் வந்துவிட்டார் என்கிற அடிப்படையில் மகிழ்வார்களோ அந்த அடிப்படையில் தான் முகவை மக்களும் திருக்குவளையின் மைந்தர் எங்களுக்கும் மைந்தர் என்கிற வகையில் வரவேற்றனர்

மோடிக்கு சர்வாதிகார ஆட்சிக்கு முடிவுரை பயணம் எழுத துவங்கியுள்ளது. தலைவரின் முகவை பயணம்.

உப்பு புளி மிளகாயை ஊருக்கு கொடுத்த வெயில் நிலத்தில் உள்ள மனிதர்கள் வெள்ளந்தியானவர்கள், நல்லிணக்கத்தோடு வாழ்க்கூடியவர்கள். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற கணியன் பூங்குன்றன் பிறந்த மண்ணில் தலைவர் வருகையால் திருக்குவளை மலர்ந்துவிட்டது. இனி தேசியக்குவளை மலராது